31st March 1965]

(இ) அப்படியென்றால் என்ன என்ன கனிவளங்கள் எந்த அளவில் கிடைக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) சபை முன் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

(a) Yes Sir.

(b) A statement[a] is placed on the Table of the House.

திரு. ம. கமலநாதன் : சேலத்தில் மிக அதிகமாகக் கிடைக்கும் இரும்புத் தாதுவை வைத்துப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தாலும், வேறு கங்கர் போன்ற கனிப்பொருள்கள் மிக அதிகமாக இருப்பதால், அந்த வட்டாரத்தில் ஒரு சிமின்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசம் இல்லை.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தணிக்கை அறிக்கை

*** 379 கேள்வி.— திரு. தா. சின்னசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 1962-63-ம் வருடத்திய தணிக்கை அறிக்கையை அமல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 1962-63-ம் வருடத்திய தணிக்கை அறிக்கையில் அந்த ஆலையின் சில குறைபாடுகள் எடுத்து காண்பிக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை ரிஜிஸ்ட்ரார் பரிசிலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எப்போது முடிவு எடுத்தது? இன்னும் ஆரம்பிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆரம்பத்தில் ஷேர் காபிடல் வசூல் ஆகவில்லை. அதற்குப்பிறகு மெஷினரி கிடைப்பதற்குக் காலதாமதம் ஆனது. அதுதான் காரணம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த ஆலையைப்பற்றிச் சொல்லும்போது அதன் கணக்குகளிலே குற்றம் கண்டுபிடித்தார்கள் என்ற காரணத்திற்காக அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றப்பட்டாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது எனக்குத் தெரியாது. எனது சக அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி. கூட்டுறவு இலாக்காவின் கணக்குகள் பற்றி அவருக்குத்தான் பொறுப்பு.

---

[a] Printed as Appendix II on pages 673-678